# திருவாசகப்பாடல்களில் உவமைகளும் அவற்றின் பின்புலமும்

***மு. தியாகராஜன்***
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783838

**ஆய்வுச்சுருக்கம்**

*கவிஞன் எண்ணிய கருத்தை எண்ணியவாறு படிப்பவர் மனதில் பதிய வைக்கும் இயல்புடையது. ஒரு பொருளை அழகுப்படுத்தி கூறுவதற்கு உவமை பயன்படுகிறது. மணிவாசகப்பெருமான் தன் ஆன்மீக அறிவு அப்பாற்பட்டு சிவபோக நுகர்ச்சி முதலியவற்றை உவமையின் சொல்லிருப்பது சிறப்பு வாய்ந்ததாகும். இறையியல் உண்மைகளையும் இறைவனின் கருணையும் திருவாசக உவமைகள் வாயிலாக அழகுற விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர். நூல் முழுவதும் கூறப்பட்டுள்ள உவமைகளில் கற்போரது உள்ளத்தில் கருத்தை அழுத்தமாக பதியவைக்கிறது. திருவாசக உவமைகள் நாய், பசு முதலிய விலங்குகள் இடம்பெறுகின்றனர். இதில் மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்தபோது அவர் மிக நுண்ணிய அறிவுடன் அவற்றை கவனித்து தம்முடையபாடலில் கையாண்டுள்ளார். மேலும், இறைநாற்றம் இன்றி ஐம்புலன் வழியே சென்று உழலும் உலக மக்களின் நிலையை மாணிக்கவாசகர் தன் மேல் ஏற்றிப் புலம்பும் விதமாக திருவாசகப்பாடல்கள் அமைந்துள்ளன. இறைவனின் பெருமையும், தன் சிறுமையும் ஒருங்கே காட்டிய மாணிக்கவாசகர் ஆதியும், அந்தமுமில்லாப் பெரியோன் அற்பனான என்னை ஆண்டு கொண்ட கருணைத் திறம் வியக்கும் வண்ணமாய் உள்ளது. அத்தகைய சிவானந்தத்தேனை, பல எளிய உவமைகள் மூலம் விளக்கிய மாணிக்கவாசகரின் பக்தி உணர்வு திருவாசகம் முழுமையும் மணியிடை நூல் போல் ஊடுருவி நின்று ஒளி வீசத்திகழ்கிறது. அத்தகு கவிதை சிறப்பை எடுத்துரைப்பதை இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

*கவிஞர்கள் இயற்றிய செய்யுளை சொல்லாலும், பொருளாலும் மேன்மை பெற அழகுப்படுத்தி இருப்பதனை அணி என்று போற்றப்படுகின்றனர் தமிழ் சான்றோர்கள். அந்த வகையில் ஒன்றுதான் உவமை அணி. அணிகளில் முதலாவதாக பிற அணிகளுக்கு தாயாகவும் விளங்குவது உவமை அணி ஆகும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உவமையியல் என்னும் இயல் அமைத்து இவ்வணியை விளக்கி கூறியிருப்பதால் இந்தச் சிறப்பை உணரலாம். அத்தகு சிறப்பு வாய்ந்த மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் உவமைகள் இடம்பெறும் விதத்தினை காணலாம்.*

**உவமையணி - விளக்கம்**

*உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் உவமையணி. ஒரு பொருளை விளக்குவதற்கு அதனோடு ஒப்புமை உடைய இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டுஅழகுப்படுத்திகூறுவதாகும். அதாவது புலவர் தாம் சொல்ல எடுத்துக் கொண்ட பொருளை வேறு ஒரு பொருளுடனோ, அப்பொருளுடனோ, பல பொருளுடனோ அப்பொருளின் பண்பு, தொழில், பயன்*

*என்பவற்றை காரணமாகக் கொண்டு இயைபுபடுத்தி இரு பொருள்களுக்கும் இடையே உள்ள ஒப்புமை புலப்படுத்தும் படி பாடுவது உவமையணி.*

*தொல்காப்பியத்தில்,*

***"வினைபயன் மெய்உரு என்ற நான்கே***
***வகைபெற வந்த உவமத்தோற்றம்"***
***(தொல் . நூ.1222)***

*என்று குறிப்பிடுவதனை காணலாம்.*
*(தமிழண்ணல்.2009)*

### உடல் உறுப்புகள் சார்ந்த உவமைகள்

***கயல் மாண்ட கன்னி (திருத்ளேணம்-11)***

*கயல்மீனின் மாட்சியையுடைய கண்களை ஒத்த, உமையை இடப்பாகங் கொண்ட இறைவன் கண்ணிற்குக் கயல் மீனை உவமையாகக் கூறுகிறார். கொச்சேகரிடம் செம்பாதியுங் கொண்ட நாயகியை அங்கயற்கண்ணி மீனாட்சி. இங்ஙனம் கூறக்காரணம் உண்டு. கயலானது தன் நோக்கிலேயே முட்டைகளை பொறித்துக் தன் இனத்தை வளர்ப்பதை ஒப்ப அம்மையும் தன் அருள் நோக்கினாலேயே உயிர்களின் அறியாமையை போக்குவாள். மீன் தன் கண்கள் மூடும் காலம் வரையும் தன் கண்ணை மூடாது. இதுபோன்ற மீனாட்சியம்மையும் மக்களுக்கு எங்கேனும் இடர் வருமா என்ற காரணத்தால் தன் இமைகளால் கண்களினை இமைக்காமல் இருந்து வருகிறார். மீன் போன்ற கண்களால் அருளாட்சி நடத்துவதால் மீனாட்சி என்ற பெயர் பெற்றாள்.*

*தம்மாட்டு நிகழும் அக மாற்றத்தை உலகினர் காண முடியாமையினால் பழைய மாணிக்கவாசகரகவே நினைத்து ஏசும் மக்களையும் அவர்கள் அறியாமையையும் காட்ட மாணிக்கவாசர் ஒரு உவமையை கையாளுகிறார். திருவண்ணாமலையில் கன்னிப் பெண்கள் மார்கழி விடியலில் நீராடி இறைவனை வழிபடும் காட்சியை விளக்கும் திருவெம்பாவையில் அப்பெண்கள் மழைப் பொழிந்து நாடு செழிக்க வேண்டும் என வணங்குகின்றனர். அப்பாடலில் அமைந்த உவமையணி இலக்கிய விருந்தாக விளங்குகின்றது. மழையே! நீ கடல் நீரையுண்டு அம்பிகையின் உருவம் போல கறுத்தும், அம்மையின் இடைப்போல் மின்னியும், சிலம்பொலி போல இடித்தும், புருவம் போல் வானவில் தோற்றியும் அம்பிகை அடியார்களுக்கு வழங்கும் அருள் போலப் பொழிவாக என்று கூறும் பாவைப்பாட்டு படிப்பவர்களுக்குச் சுவையூட்டும் திருப்பாட்டாக விளங்குவதனை, அழகிய கருங்குவளை போன்ற அழகிய கண்களையுடைய மடந்தையீர், மதியைக் கண்டு கருங்குவளைத் தேனைச் சுரப்பது போன்று தலைவனைக் காண விழைந்து கண்களில் நீர் சுரத்தலால்; தடங்கன் என்கிறார்.*

***மாரின் வடுவகிரன்ன (திருத்ளேணம்-11)***

*மகளிரின் கருவிற்கு மாவின் வடு உவமையாக கூறப்படுகிறது.*

***கற்போலும் நெஞ்சே (திருத்தோணோக்கம்)***
***கல்நெஞ்சு உருகிக் கருணையினால் ஆண்டு கொண்டு***
***(திருக்கோத்தும்பி -10)***

*மாணிக்கவாசகர் திருவடியார் கூட்டத்துடன் சேர்ந்தும், சிவனாரின் புகழோதும், சைவ ஆகமங்கள் அனைத்தும் கற்றும், நற்பேரு பெறாதயான் கல்போல் வன்மையுடையவனாய் இருந்ததாகவும், பல நாட்கள் தண்ணீரில் கிடந்தாலும் கல்லின் திண்மை மாறாது போல் திருவடியார் கூட்டத்துடன் பல நாள் இருந்தும் இன்னும் குருட்டானவன் போன்று மேன்மை பெற்று விளங்க என்னை காத்தருள்வாய் என்று வேண்டுகிறார்.*

### பறவை சார்ந்த உவமைகள்

*கிளி போன்ற மகளிரின் இனிய சொற்களுக்கு அஞ்சேன் என்று கூறுகிறார். ஒரே வார்த்தையால் ஆட்கொள்ளும் சொல்லையும், குமிழ்சிரிப்பையும் உடையவனாகிய பெருமானை காணப்பெற்றவர் மாந்தர் அழகிய சொல்லுக்கும், வஞ்சனை சிரிப்புக்கும் அஞ்ச வேண்டியது இல்லை என்பதனை*

***கிளியனார் கிழவி (அச்சப்பத்து -4)***

*என்று குறிப்பிடுவதை காணலாம்.*

### தொழில் சார்ந்த உவமைகள்

நெசவு நெய்கின்றவர்கள் பாவு என்ற பெயரோடு உள்ள நீண்ட நூலின் இடையே ஊடு என்று சொல்லப்படும் குழலை இடப்புறம் வலப்புறமாகச் செலுத்தித்துணியை நெய்வர். பாவு என்று சொல்லப்படும் நீண்டுள்ள நூலுக்கும் அதனுடே இடப்புறமும், வலப்புறமே செல்லுகின்ற குழலுக்கும் வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரிகின்ற தொடர்பு எதுவும் இல்லை என்றாலும் ஒரு நூறு முறை இந்த சூழல் இடப்புறம், வலப்புறம் சென்றால் தான் ஆடை இரண்டங்குலம் நெய்யப்பட்டிருக்கும். இதில் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று ஆசைகளும் பாவ நூல் போல் நீண்டு கிடைக்கின்றனர். உள்ளம் என்னும் குழல் இம்மூன்று நூல்களுக்கும் இடையே குறுக்கும் நெடுக்குமாக புகுந்து புறப்பட்டு வரவர நம்முடைய வினை நெய்யப்படுகிறது நம்மையும் அறியாமல் நம் அதிகாரத்துக்கு கட்டுப்படாமல் நம்முடைய உள்ளம் இந்த ஆசைகள் மூன்றினிடையே சுற்றி வந்து வினையை நெய்வதை தடுக்க வேண்டும் என்பதனை

**பா இடை ஆடு குழல் போல்**

**(அடைக்கலப்பத்து - 8)**

என்ற பாடலில் பதிவு செய்கிறார்.

### கலைச் சார்ந்த உவமைகள்

பொம்மலாட்டத்தை நிகழ்த்துபவன் தோலினால் செய்யப்பட்ட பொம்மைகளை வெள்ளைத்திரையின் முன்னே விட்டு ஆடச் செய்வான். இவ்வாட்டத்தில் இடம் பெறும் பொம்மையின் பல உறுப்புகளிலும் கட்டப்பட்டக் கயிறு அவனுடைய கையில் உள்ளவிரல்களோடு இணைக்கப்பட்டிருக்கும். ஆதனால் தான் அவன் ஆட்டுவிக்க இப்பொம்மைகளும் ஆடுகின்றனர். இனி ஆட்டுவதில்லை பொம்மலாட்டக்காரன் முடிவு செய்து விட்டால் இந்த தோல் பொம்மைகள் கீழே விழுந்து கிடப்பது தவிர வேறொன்றும் செய்யமுடியாது. அதுபோன்று மாணிக்கவாசகர் தம்மை வீழ்ந்து கிடக்கும் பொம்மையோடு அவன் ஆட்டத்தில் ஒரு பகுதியாக திருப்பெருந்துறையில் திருவாதவூரார் என்ற மனிதரை மாணிக்கவாசகர் என்ற ஒப்பற்ற பொம்மையாக செய்து விட்டான் என்பதனை

**தோலில் பாவைக் கூத்தாட்டு**

**(ஆனந்தமாலை - 3)**

என்று பதிவு செய்கிறார். பொதுவாக உண்மையை உணர்த்தவும் உணரவும் உவமை ஒரு சிறந்த வழியாகும். அறியாதவற்றை அறிவிக்கவும் அறிந்தவற்றைத் தெளிவாக்கவும், அறிவார்ந்த சான்றோர் உவமை நெறியை மேற்கொள்ளுவர் (ரா.சீனிவாசன், 1979).

### மரம் சார்ந்த உவமைகள்

அடவி மரத்திற்கும் தனியே நிக்கும் மரத்திற்கும் சில வேறுபாடுகள் உண்டு. தனி மரமாக இருக்கும் போது புறத்தே உள்ள வெயில், மழை முதலியவை மரத்தின் பட்டு பெரும் பயனை நல்கும். நூற்றுக்கணக்கான பறவைகள் வந்து கூடுகட்டித் தன்பால் தங்க அம்மரம் உதவியளிக்கும். செறிந்து விளங்கும் காட்டிடை உள்ள மரத்திற்கு (அடவி மரத்திற்கு) மேலே குறிப்பிட்ட எதுவும் இல்லை. அதாவது அடியார் கூட்டம் என்ற வெயிலும் இறையருள் என்ற மலையையும் தமக்கு கிட்ட வில்லை என்பதால் தம்மை அடவி மரம் என்கிறார் மாணிக்கவாசகர். அன்றியும் சிற்றுயிர்கள் வந்து தங்குகின்ற வாய்ப்பு அடவி மரத்திற்கு இல்லையா. அதனால் தன்னுள் கீழ்பட்டவருக்கு ஏதோ ஒரு உதவி செய்து அவர்கள் துயரை துடைக்கும் வாய்ப்பும் நமக்கு இல்லை என்பதை அடவி மரம் என்ற சொல்லால் குறித்தாயிற்று என்பதனை

**அடவிமரம் (உயிருண்ணிப்பத்து - 10)**

என்று பதிவு செய்கிறார். மேலும்,

**ஆற்றங்கரை மரமாய் (நீத்தல் விண்ணப்பம் -3)**

என்பதில் ஐம்புல இன்பம் என்பது ஆற்றங்கரை. அவ்வின்பத்தில் திளைத்தல் என்பது கரையில் நிக்கும் மரம். ஆற்றங்கரையில் வளர்வது போல் தோன்றி பின்னர் வெள்ளம் வந்த காலத்து அழியும். அதுபோல் ஐம்புலத்தில் ஈடுபடுவோர் முதற்கண் மகிழ்வது போல்

களிப்பர். பின்பு பெருந்துன்பத்திற்கு ஆளாகி தனக்கே தீமை கொள்ளும் மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றால் நுகரப்படும் இன்பத்தினைத் தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறிவும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள (1101)**

கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும் இவ்வொள்ளிய தொடியையுடையாள் கண்ணே உளவாயின. வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருட்களால் அனுபவிக்கப்படுவன (பரிமேலழகர் 2004), மேலும்,

ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே நல்வழிச் செய்யுளால் உணரலாம். நீர் வளமையால் அம்மரம் செழிப்புடன் சில நாட்கள் வளரனும் ஆற்றில் வரும் வெள்ளத்தால் அம்மரம் ஒரு நாள் அடியுடன் வீழ்வது திண்ணம்.

**இருவினை மாமரம் (திருவண்டப்பகுதி -87)**

என்பதில் இருவினை என்ற நீர்ச்சுழியில் (சுழல் என்பது தற்கால வழக்கம்) சிக்குவனயாவும் வளைக்கப்பட்டு மீளாமல் அதனுள்ளே அழிதல் இயல்பு. அதுபோல் இன்பமாகிய சுழியில் துன்பம் யாவும் சிக்கி அழிந்தன. கரையிலுள்ள மரங்கள் எத்துணைப் பெரிதாக இருப்பினும் வெள்ளப் பிரவாக்கத்தின் முன் நிலைப்பெறாது. அவற்றை வேர்பறித்து வீழச்செய்யும் என்பதனை மணிவாசகர் பதிவு செய்கிறார்.

**தாம் வளர்த்தது ஓர்நச்சு மாமரம் ஆயினும் கொலார்**
**(திருச்சதகம் -100)**

தான் வளர்ந்த ஒரு மரம், அம்மரம் வளர்ந்த நிலையில் நச்சு தன்மை கொண்டதாக இருந்தாலும் அதனை வளர்த்தவர்கள் வெட்ட மாட்டார்கள். அதுபோன்று நானும் விளங்குவதாக மாணிக்கவாசகர் கூறுகிறார். தலைவன் தான் வளர்ந்த மரத்தின் பக்கலில் நின்று தன்னைப் புகழ்ந்தலை கேட்டு நாணிய தலைவி தலைவனிடம் சற்றே தள்ளி செல்வோம் என்கிறாள். அதற்கு தலைவன் நீயும் நானுமே இவணிருக்க நீ நாணுவது தான் என்னை என்புழிதலைவி இதோ இங்கு நிற்கும் மரத்தினை என் தாய் விதையிற்று பேணினாள். எனக்கு பின் இவள் தோன்றியவளாதலின் எனக்கு இம்மரம் தங்கை முறைமை. தங்கை முன் காதல் பேச்சுக்கள் வேண்டாம் என சங்கத்தமிழ் பேசும் மரத்திற்கு உயிர் உண்டு என்றும், அதனைப் பாசத்தோடு வளர்க்க வேண்டும் என்பதனை அறிவோம். மேலும்,

**வற்றல் மரம் போல் (பிரார்த்தனைப்பத்து- 10)**

மரம் என்றால் இலை பூ காய் என்பவற்றைப் பெற்றிருக்க வேண்டும். அது போல் ஒரு மனிதன் என்றால் மனிதனுக்குரிய இரக்கம், உறக்கம் ஆகிய பண்புகள் அவனிடத்தில் இருக்க வேண்டும். இவை ஒன்றும் இல்லாத வளர்ந்து நிற்கின்ற தன்மை வற்றல் மரம் என்கிறார் மணிவாச கர். ஒரு காலத்தில் பசுமையோடு இருந்து பிறகு இலை முதலியவை எதுவும் இல்லாமல் காய்ந்து நிற்கும் மரத்தை போல் எவ்வித வெளிப்பாடு இன்றி இருந்ததால் தம்மை வற்றல் மரம் என்கிறார்.

**பசுமரத்தாணி அறைந்தால் போல**
**(போற்றி திருஅகவல் - 65)**

ஒரு ஆணியை பச்சை மரத்தில் அடிப்பதற்கும் காய்ந்த மரத்தில் அடிப்பதற்கும் வேறுபாடு உண்டு. காய்ந்த மரத்தில் அறையப்பட்ட ஆணியை சாதாரண பிடி குறடை வைத்துக்கொண்டு அசைத்தாலே வெளியில் எடுத்து விடலாம். ஆனால், பச்சை மரத்தில் அறையப் பெற்ற ஆணி புறத்தை உள்ள கருவி கொண்டு அசை த்தால் வெளியே எடுத்தல் ஏறத்தாழ இயலாத காரியம். அது போன்று மாணிக்கவாசகரின் உள்ளத்தில் ஏற்பட்ட உருக்கம் வெளியேற இயலாது என்பதை தெரிவிக்க இந்த உவமையை கையாண்டுள்ளார். உலகிற்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவதாகும். அப்பழமொழி முழுமையாக இல்லாவிட்டானும் அதை விளக்கி கூறும் போது முழுக்கருத்தும் வெளிப்படும் (சக்திவேல்- 2012)

***கொம்பர் இல்லாக் கொடி போல்***

***(நீத்தல் விண்ணப்பம்-20)***

*கொம்பு இருந்தால் தான் கொடி அதனை பற்றி படர முடியும். கொம்பு இல்லாமல் கொடி படற இடமில்லாமல் வாடி, வதங்கி, வெம்பி அழியும். கொடி பற்றி படர்ந்து செழித்தோங்கிப் பூத்தும், காய்த்தும், குலுங்குவதற்கும் கொம்பு தேவை. பற்றிப்படர கொழுக்கொம்பு இல்லா கொடியைக் கண்ட பாரிவள்ளல் கொடிக்கு கொழுக்கொம்பாய்த் தன் தேரையே நிறுத்தினான். இப்பெருஞ் செயலைச் சுந்தரர் தேவாரத்தில் கொடுக்கில்லா தானே பாரியே என்று கூறினும் கொடுப்பார் இல்லை என்று விதந்தோதியதை காணலாம் (திருப்புகலூர் பதிகம்-2). இறைவன் என்ற கொம்பில் அடியார் என்ற கொடி பற்றி படர வேண்டும். மானிடராய் பிறந்தார் அருள் நெஞ்சங்கள் கொண்டு அடியாராக மாறினால் இறைவன் நமக்கு கொழுக்கொம்பாக அமைவான் என்பதனை இப்பாடல் வழி அறியலாம்.*

**காய், கனி, பழங்கள் சார்ந்த உவமைகள்**

*மனம் நெகிழாது நான் துளைக்கப்படாது ஒரு சுரக்காய் போன்று உள்ளேன். பொத்தல் சுரக்காய் நீச்சலுக்கு ஆகாது என்பது பழமொழி. சுரைக்காய் நன்கு முற்றிய பின் பழுக்கச்செய்து அதனை நன்கு குடைந்து நீர் கொண்டு செல்லும் குடுக்கைகளாகவும் பயன்படுத்துவர். சுரைப்பழத்தின் மேல் பகுதியைச் சற்று சீவி வெல்லத்தையோ அல்லது சர்க்கரையோ நல்ல முறையில் தடவி நிழலில் வைப்பர். எறும்புகள் ஒன்று கூடி சக்கரையை உண்ணும் நிலையில் அதனை நன்கு துளைத்து விடும். ஓடு மட்டுமே மிஞ்சும் இதனை துளையிடுதல் என்பர். (நடராசன் 2021) தென்னை மரம் ஏறிகள் இறங்கும் தொழிலாளர்கள் இதனை இடுப்பில் கட்டிக் கொண்டு மரம் ஏறி இறங்குவர். இது சுமையற்றது மிக லேசாகவும் இருக்கும். துளையிடப்படாத சுரைக்காய் ஒன்றுக்கும் உதவா வெதும்பி அழுகி வீணாகும். யான் நின் அருள் தங்குவதற்குப் பயன்படாது வாழ்வதனை*

***நான் ஓர் தோளாச் சுரை ஒத்தால்***

***(பிரார்த்தனைப்பத்து -10)***

*போன்றதாகும் என்கிறார்.*

***பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்***

***(நீக்கல் விண்ணப்பம் - 46)***

*பலாவின் பெரிய சுளையில் சிக்கிக் கொண்டே ஈ உண்ணும் அளவுக்கு உண்டு பிறகு வெளியே புறப்பட நினைத்தாலும் புறப்பட முடியாதபடி அதன் கால்கள் பலத்தின் பசையின் காரணமாக ஒட்டிக் கொள்கின்றனர். மகளிரிடம் ஈடுபாடு கொண்டவர்கள் அனுபவித்த பிறகும் அந்த எண்ணத்தில் இருந்து விடுபடாமல் அதிலே சிக்கி தவிப்பர் அத்தகை நிலையைவிட்டு விட வேண்டும் என்கிறார் மணிவாசகர். இதனை நாட்டுப்புற மக்களின் நுண்மையான வெளிப்பாடு பழமொழி என மீ.அமு.நாசர் அலி கூறுவதாக சு.சண்முகசுந்தரம் தன்னுடைய நாட்டுப்புற இயல் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளார். (சண்முகசுந்தரம் 2008)*

***புளியம்பழத்து ஒத்து இருந்தேன்***

***(ஆசைப்பத்து- 5)***

*புளியம்பூ சிறு பிஞ்சாக மாறிப்பின் பழமாக முற்றிய நிலை வரை ஓடும் அதனோடு ஒட்டியே இருக்கும் தன் நரம்புகளாம் கோதும் ஒட்டினுடைய ஒட்டியே பின்னிப்பிணைந்து இருக்கும். பழமாகும் பக்குவ நிலை வரவர ஓடு அப்பழத்தினின்று சற்றே விலகி அப்பழத்திற்குக் காவலாக நின்றமையும் அப்பொழுது ஒட்டிற்கும், பழத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஒட்டுக்கும்; பழத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. புளியம்பழத்தின் ஓடு எங்ஙனம் தனித்து நிற்கின்றதோ யானும் அதனைப் போல் இறைவனின் அன்பு மீது ஆசையினை அறுத்து பற்றற்று இருக்கிறேன். புளியை விரும்புவார் புளியின் மேலுள்ள ஓட்டினை விலக்கி புளியை பெற்று இன்புவார் போல் என்னை கூட்டினை நீ அகற்றி என் உயிரை உன் திருவடிக்கீழ் வைக்க என புளியம்பழத்தோடு விளக்குவதனை காணலாம். இதற்கு சான்றாக திருக்குறளில்*

***யாதானில் யாதானின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் நிழல் (341)***

*குறளுக்கு சான்றாய் புளியம்பழம் விளங்குவதை அறியலாம்.*

***வாழைப்பழத்தின் மனம் கனிவித்து***
***(நீத்தல் விண்ணப்பம் -34)***

*வாழைப்பழங்கள் பல வகை இருந்தாலும் பச்சை, மஞ்சள் என்ற இரண்டு நிறங்களை உடையன. அங்கு பழுத்த நிலையிலும் பழுக்காத நிலையிலும் தோல் பகுதி பச்சையாகவும், மஞ்சளாகவும் இருக்கும். நன்கு கனிந்த நிலையிலும் உள்ளே உள்ள சதை பகுதி மென்மை தன்மை பெற்று சுவை அதிகமாக இருக்குமே தவிர புறப்பகுதியின் நிறத்தில் மாறுபாடு தோன்றுவதில்லை. இந்த உவமையை கூறியதால் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்கு முன்னும் திருபெருந்துறை நிகழ்ச்சி போதும் அது நிகழ்ந்தது சில காலம் கழித்து, பழம் கனிந்தது போல திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் அவர் மனம் கனிந்து விட்டது. பின்னர் அந்நிலையை மாறியதால் இப்பொழுது அந்நிலை மீண்ட கருத்தை வாழைப்பழத்தின் மனம் கனிவித்து என்று பாடுவதனை,*

***கல்லை பிசைந்து கனியாக்கி***
***(திருவம்மானை-5)***

*என்று பாடுவதனை காணலாம்.*

**பசு சார்ந்த உவமைகள்**

*ஒரு பசு மந்தை பல பசுக்கள் மேய்த்து விட்டு வீடு திரும்புகின்றன அவற்றில் ஒன்று குருடு, மற்ற பசுக்களோடு அதுவும் நடந்து வருகிறது. வீட்டை நெருங்கியதும் பகல் முழுவதும் கன்றைப் பிரிந்திருந்த பசுக்கள் தத்தம் கன்றைக் கண்டவுடன் பெருங்குரலில் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றன. இந்தக் குருட்டு பசு தன் கன்றை காண முடியாவிட்டாலும் மற்ற பசுக்கள் கத்துவதால் தானும் அவற்றுடன் சேர்ந்து கத்துகின்றன. மெய்யடியார்கள் சிவபெருமானின் பக்தியில் தோய்ந்து ஆனந்தமடைந்து அவன் புகழை பாடுகின்றனர். மாணிக்கவாசகரோ தனக்கு உண்மையான பக்தி இல்லை என்று கூறிக் கொள்கிறார். 'யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்' ஆனால் மற்ற மெய்யடியார்கள் சிவன் புகழ் பாடும்போது குருட்டுபசு மிலைப்பது போல நானும் பாடுவதாக,*

***ஊர்ஆ மிலைக்கக் குருட்டு ஆமிலைத்தாங்கு உன்தாளிணை அன்புக்கு***
***ஆனா அடியேன் அயலெ மயல்கொண்டு அழுகேனே***
***(திருச்சதகம் 87)***

*மாணிக்கவாசகர் பக்தியின் உச்சியில் நின்று கொண்டு தன் அன்பு பொய் என்று கூறிக் கொள்வது நெஞ்சை உருக்குவதாக உள்ளது. கடவுளை அடைய நம்முடைய பக்தி உணர்வு எவ்வளவு தீவிரமாக இருக்க வேண்டும் என்பதற்குத் மாணிக்கவாசகர் காட்டும் உதாரணமாக புதிதாகக் கன்று ஈன்ற பசு தன் கன்றைச் சற்று நேரம் காணாவிட்டால் கூடக்கதறித் தீர்த்து விடுகிறது. மேயச் சென்றால் கூட அதன் நினைவுகள் கன்றிடமே உள்ளது. வயிறு நிரம்பியதும் அது கன்றிடம் திரும்பி வரும் வேகத்தையும் அதனை நக்கிக் கொண்டே பால் ஊட்டுவிக்கும் பாசத்தையும் பார்த்தவர்களுக்கு கற்றா (கன்றை ஈன்ற பசு போல) கசிந்து உருக வேண்டுவன என்று அவரது உவமையின் தன்மையினை காணலாம்.*

***கூத்தா உன் குரைகழற்கே***
***கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே***
***(திருப்புலம்பல் -3)***

***கற்றா மனமெனக் கதறியும் பதறியும்***
***(போற்றித் திருவகவல் -73)***

*இறைவனின் பெருமையை தன் சிறுமையும் ஒருங்கே காட்டி அத்தகைய பெரியோன் எவ்வளவு அற்பனான என்னை ஆண்டு கொண்ட கருணைத்திறம் எவ்வளவு பெரியது என்று வியந்து, அந்த சிவானந்தத் தேனை மீண்டும் பருகத் துடிக்குமா ஆவலே அது. மாட்டை உவமையாக்கி மாணிக்கவாசகர் அதை விளக்கும் அழகை காணுங்கள். மாடு சில சமயம் மந்தையிலிருந்து பிரிந்துவிடும். கால் போனவாக்கில் அது வேற்றூர்*

போய்ச்சேரும். அங்கு அதனை கவனிப்பார் இருக்க மாட்டார்கள். அதுவாக கிடைத்ததை உண்டு, கண்ட இடத்தில் படுத்துறங்கி தானும் மகிழ்ச்சியாக இல்லாமல் மற்றவர்க்கும் பயன்படாமல் வறிதே பொழுது போக்கும் இது ஆள்வாரிலி மாடு என்றும் ஊர்ரேறு என்றும் கூறப்படும். மெய்யடியார் கூட்டத்தில் சேந்திராமல் பிரிந்து நின்று தன் மனம் போன போக்கில் ஆள்வார் இல்லாத மாடு போல தான் வாழ்வதாக மாணிக்கவாசகர் கூறுகிறார். இப்படிப்பட்ட தன்னையும் எதிர்பாராத விதத்தில் இறைவன் ஆட்கொண்டதை நினைத்து மகிழ்கிறார்.

***சீரேறடியார் நின்பாதம் சேரக்கண்டும் கண் கெட்ட***
***ஊரேறாய் இங்கு உழல்வேனோ***
***(திருச்சதகம் -53)***

மாடு தொடர்பான பொருட்களும் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. உவமிக்க முடியாத சிவானந்தத்திற்காக உவமையாக தேன், கரும்புச்சாறு இவற்றுடன் பாலும் அவரால் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. மாடு வளர்ப்பவர்கள் வீட்டில் தயிர் கடைதல் ஒரு தினசரி வேலை மாணிக்கவாசகர் தயிர் கடையப்படுவதைக் கூர்ந்து கவனிக்கிறார். மத்துக்கும், தாழிக்கும் இடையில் தயிர் தான் என்ன பாடுபடுகிறது. புலன்களால் அலைக்கழிக்கப்பட்டுப் பரம்பொருளில் நிலை கொள்ளாமல் தவிக்கும் தன் மனதுக்கு அதை உவமிக்கிறார்.

***மானிடலாவிய நோக்கியா படிறிடை மத்திடு தயிராகித்***
***தேனிலாவிய திருவருள் புரிந்தவென் சிவர்நகர் புகப்போகேன்***
***(திருச்சதகம் -40)***

***மத்திடு தண்டயிரிற் புலன் தீக்கதுவக் கலங்கி***
***வித்திறுவேனை விடுதி கண்டாய்***
***(நீத்தல் விண்ணப்பம் -30)***

***மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத்திடவுடைந்து***
***தாழியைப் பாவு தயிர்போற் தளர்ந்தேன்***
***(அடைக்கலப்பத்து -6)***

நிறைய மாடு உள்ளவர்கள் நெய்யை ஒரு குடத்தில் சேகரித்து வைத்திருப்பர். அது வீசும் மணத்தால் கவரப்பட்ட எறும்புகள் மெல்ல குடத்தின் மீது ஏறி உள்ளே இறங்கி நெய்யை அடைத்துவிடும். நெய்ப்பசை கால்களை அசையவிடாமற் செய்யவே, அவை திரும்பிச் செல்ல முடியாமல் நெய் மீது மிதக்க தொடங்கும். மனிதனும் அப்படிதான். புலன்களுக்கு மனமகிழ்ச்சி தரும் உலகப் பொருட்கள் பால் நாட்டம் கொண்டு அவற்றை அடைவதிலே தன் முயற்சி முழுவதும் செலவிடுகின்றான். அந்தப் போகப் பொருட்களை அடைந்த பின் அவனால் மீள முடிவதில்லை. இறைநாற்றம் அவனுக்கு இயலாமற் போகிறது. வாழ்வின் லட்சியம் என்ன என்பதை உணராமல் உரிய கடமைகளைச் செய்யாமல் புலனின்பத்தை மெய்யென்று மயங்கி, செய்யக்கூடாததைச் செய்து அதிலேயே இருக்கும் மக்களின் நிலையை தன்மேல் சாத்தி மாணிக்கவாசகர் புலம்புகிறார்.

***உள்ளனவே நிற்க இல்லன செய்யும் மையல் துழனி***
***வெள்ளம் அலேனை விடுதிகண்டாய் வியன் பாத்திரங்களைப்***
***பொள்ளல் நல்வேழத்து உயிராய் புலன்நின்கண் போதல் ஒட்டா***
***மௌ;ளனவே மொய்க்கும் நெய்க்குடம் தன்னை எறும்புஎனவே (நீத்தல்விண்ணப்பம் -24)***

பசுவிலும் பரமனையே இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டிருந்த மாணிக்கவாசகர் பசுவை உவமையாக வெளிப்படுத்துகிறார்.

## வெண்ணெய்

பாலைத் தயிராக அத்தயிரிலிருந்து கடைத்தெடுக்கப்படும் கொழுப்புச்சத்து பொருள்தான் வெண்ணெய் எனப்படும். இதனைக் கலத்திலிட்டு நெருப்பிடும்போது வெண்ணெய் உருகி, நெய் ஆகின்றது. வெண்ணெய் உருகும் பழக்கம் பண்டைத்தமிழ் மக்களிடையே இருந்தது என்பதை தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றனர். மேலும், பக்தி இலக்கியங்களில் மணிவாசகர் திருவாசகத்தில் பாலை நன்கு காட்சி ஆறிய பின் சிறிது மோரினை அதில் ஊற்றுகிறோம். இதனை புரைஊற்றுதல் என்கிறோம். புரை ஊற்றிய பால் தன் அளவில் கெட்டு தயிராகிறது. இதனை மத்துக் கொண்டு கடைகின்றோம். (இந்நிகழ்வை பல இடங்களில் மணிவாசகர்

*பேசுவதனை காணலாம்) கடைந்தவுடன் தயிர் கெட்டுமோரும், வெண்ணெய்யும்கிட்டுகிறது. வெண்ணெயைத் தீயிலிட்டு உருக்கிறோம். மணமான நெய் கிடைக்கிறது. வெண்ணெய் அழிகின்றது என்பதனை*

***கறந்தபால் கன்னலொடு நெய்கலந்ததாற் போல***
***(சிவபுராணம் - 46)***

*இதில் பால், தயிர், வெண்ணெய் அழிந்து நெய் கிடைப்பது போல ஆணவம், கன்மம், மாயைஅழியதிருவடிப்பேறுகிட்ட இணையடிகள் உதவுகின்றன என்பது கருத்தாகும். நோயுற்ற பசுங்கன்று நடக்க முடியாமல் தடுமாறினால் மாட்டுக்காரர் அதை ஆதரவுடன் தாங்கி, மெதுவாகத் தள்ளிக் கொண்டு தூக்கி கொண்டு போவார் இத்தகைய கன்றுக்கு நுந்துகன்று என்று பெயர் (நடராசன் 2021)*

*சொந்த முயற்சியால் இறைவனை அடைய முடியாத தான் நுந்து கன்றை போல் இருப்பதாகவும் இறைவன் தன்னைத் தேடி வந்து தாங்கி சென்றதாகவும் கூறி அந்த கருணையை வைக்கிறார் மாணிக்கவாசகர்,*

***நோயுற்று முத்து நான் நுந்து கன்றாய் இங்கிருந்து***
***நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்***
***தாயுற்று வந்தென்ன ஆண்டு கொண்ட தன் கருணைத்***
***தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.***
***(திருக்கோத்தும்பி - 10)***

*நோயுற்ற முத்து நான் நுந்து கன்றாயாங்கிருந்து பலவிதமான நோய்களால் மூப்புத்தன்மை பெற்று ஒதுக்கப்பட்ட கன்றைப்போல் இளமைக்காலத்தில் நோய்க்கு யான் மூப்பானேன் என்பதனை நோயுற்ற முந்து என்கிறார். (நடராசன் 2021) நுந்து கன்று, இளைத்து காலிடறிப் பின்பக்கம் தள்ளிக் கொண்டிருக்கின்ற கன்று உழவுக்கு உதவாது என உழவர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட கன்று. நுந்து கன்று பயனற்றிருப்பது போல யானும் பயனில் வாழ்வினன் ஆனேன் என்கிறார்.*

**முடிவுரை**

*மாணிக்கவாசகர் இறைவனிடத்து கொண்ட உருக்கத்தையும் வெளிப்படுத்த இலக்கிய தரம் மிகுந்த பல்வேறு உவமைகள் திருவாசகத்தில் கையாளப்பட்டு இருப்பதை காண முடிகிறது. இறைவனின் திருநாமத்தை சிறப்பு செய்வதாகவும் கற்போர் இன்புறும் விதத்தில் உவமைகள் எளிமைத்தன்மை மிக்கதாக அமைந்திருப்பது சிவபெருமான் நிகழ்த்திய வினையின் அடிப்படையில் பல உவமைகள் அமைந்திருக்கின்றன.*

*மாணிக்கவாசகர் உவமைகளுள் விலங்குகள் முக்கிய இடம் பெறுகின்றனர். அவற்றுள்ளும் மிக அதிகமாக பேசப்படுவது நாய். நன்றி உணர்ச்சிக்காக பாராட்டப்பட்டாலும் விலங்குகளில் மிகக் கீழானதாக கருதப்படுவது நாய். இறைவனை மிக உயர்ந்தவன் ஆகவும் தன்னை மிகத் தாழ்ந்தவனாகவும் கூறிக் கொள்வது அடியாரின் இயல்பு. மாணிக்கவாசகர் தன்னை மனிதரில் மிக தாழ்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதோடு நிற்காமல் நாயே என்றும் நாயினும் கடையே நின்றும் இகழ்ந்து கொள்கிறார். நான் என்னும் செருக்கு முற்றிலும் அழிந்து விட்ட அவரது மனநிலையை இதிலிருந்து உணர முடிகிறது.*

*நாய்க்கு அடுத்தபடியாக மாணிக்கவாசகர் மிகுதியாகப் பயன்படுத்தும் உவமை விலங்கு பசுவாகும். தமிழ் மக்களின் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பின்னிப்பிணைந்து இருப்பது பசு. அமைச்சராக இருந்த போதும் அக்கால சூழலுக்கு ஏற்ப அவரது வீட்டில் நிறைய பசுக்கள் இருந்திருக்க வேண்டும் என்பதும் அவற்றைக் கூர்ந்து கவனித்திருக்க வேண்டும் என்பதும் அவரது உவமைகளில் இருந்து அறியலாம்.*

*மனிதன் தெய்வத்தோடு கொண்டுள்ள இணக்கம் எத்தன்மையாக இருந்தாலும் நலத்தையே நல்கிறது என்பது திருவாசகப் பாடல்களின் வாயிலாக உணர முடிகிறது. நூல் அமைக்க வேண்டும் என்பதற்காக மாணிக்கவாசகர் எடுத்துக் கொண்ட*

செய்திகள் எல்லாம் பாடவில்லை. அவர் தமது உள்ளத்தை உருக்கி சொல்லோவியமாக உருவெடுத்து சொல் அழகும் பொருள் அழகும் ஆகிய இரண்டும் சேர்த்து அமைத்த நல்ல கவிதை நயங்கள் உடையவனாக திருவாச கப்பாடல்கள் அமைந்துள்ளது.

மக்களை நல்வழிப்படுத்தப் பக்தி இலக்கியத்தை படைத்து தமிழ் பக்தி நெறியை உலகிற்கு தெரிவிக்க வழிவகை செய்தவர் மாணிக்கவாசகர். அவர் இறைவனின் மீது கொண்ட அன்பு, ஈர்ப்பு, இறை மாண்பு ஆகியவை சிறப்புக்குரியவை ஆகும். இத்தகு சிறப்பு வாய்ந்த மாணிக்கவாசகரின் திருவாசகம் இன்றும் சிவவழிபாட்டுத் தலங்களில் ஓதப்பெறுகின்ற காட்சியை நாம் காணலாம்.

**துணைநின்ற நூல்கள்**


1. தமிழண்ணல், தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, பதிப்பு- 2009.
2. பி.ரா.நடராசன், திருவாசகம், உமாபதிப்பகம், சென்னை, பதிப்பு - 2021.
3. ரா.சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், அணியகம், சென்னை. பதிப்பு-1979
4. பரிமேலழகர், திருக்குறள், உமா பதிப்பகம், சென்னை. பதிப்பு -2004.
5. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. பதிப்பு -2012.
6. பி.ரா.நடராசன், சுந்தரர் தேவாரம்,உமா பதிப்பகம் சென்னை, பதிப்பு- 2016.
7. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், காவ்யா பதிப்பகம் சென்னை. பதிப்பு 2008.